**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண். 114/2024**

வாதி தரப்பு சாட்சி – 1 பழனிமுத்து திரு.M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 24.10.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. நான் குடியிருக்கும் கதவு எண்.3/14 என்ற விலாசம் தாவா சொத்திற்குள் இருக்கும் ஒரு பகுதி என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி முத்துகிருஷ்ணன் குடியிருக்கும் வீட்டின் கதவு எண் என்ன என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து ஆரம்பத்தில் எவ்வாறு எனது தந்தைக்கு பாத்தியப்பட்டது என்றால் அரசாங்கத்தால் வீட்டுமனைக்காக வழங்கப்பட்ட இடம். எந்த வருடம் அரசாங்கத்தால் வழங்கப்பட்டது என்றால் 1981ல் பட்டா வழங்கப்பட்டது. எவ்வளவு சென்ட் வழங்கப்பட்டது என்றால் 1.09 ஏர்ஸ் வழங்கப்பட்டது. எனது தந்தைக்கு வழங்கப்பட்ட வீட்டுமனை ஒப்படைவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

2. மேற்படி வீட்டுமனை ஒப்புடைவு செய்த போது என்னென்ன நான்கெல்லை குறிப்பிடப்பட்டுள்ளது கருப்பசாமி நிலத்திற்கு கிழக்கு, பொதுபாதைக்கு தென்புறம், புறம்போக்கு நிலத்திறகு மேற்கு, விவசாய நிலத்திற்கு வடக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி கருப்பசாமி நிலம், புறம்போக்கு நிலம் மற்றும் பொது பாதையின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண்.207 ஆகும். மேற்படி விவசாய நிலத்தின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண்.269 ஆகும். மேற்படி நான்கெல்லைக்குள்ள உள்ள இடம் தான் எனது தந்தைக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட இடம் என்றால் சரிதான்.

3. மேற்படி நான்கெல்லையை தான் எனது வழக்குரையிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனது தந்தை எப்போது இறந்தார் என்றால் 23.06.2006ல் இறந்தார். எனது தந்தையின் வாரிசு சான்றிதழில் நான், 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதி ஆகிய மூவர் பெயர்கள் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் கிழமேல் மற்றும் தென்வடல் அளவுகள் என்ன என்றால் தென்வடல் 43அடி கிழமேல் 28 அடி ஆகும். மேற்படி தென்வடல் கிழமேல் அளவுள்ள சொத்து தான் தாவா சொத்து என்று வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். தாவா சொத்தில் கிழக்கு பகுதியில் ஒரு ஓட்டுவில்லை வீடு உள்ளதா என்றால் வீட்டின் மேற்புறம் புறம்போக்கு இடம் உள்ளது. தென்புறம் காலி இடம் இல்லை.

4. மேற்படி வீட்டின் கீழ்புற பகுதியில் நானும், மேல்புறம் பிரதிவாதிகள் உள்ளனர் என்றால் சரியல்ல. நாங்கள் அனைவரும் ஒரே வீட்டில் தான் வசிக்கிறோம். ஒரே விலாசத்தில் தான் வசிக்கிறோம் என்பதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது தந்தை இறந்த உடன்பால் மொத்த சொத்தும் வாய்க்காரராக மூன்று பாகங்களாக பிரிக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. கீழ்புறம் 1/3 பங்கு எனக்கும், மேல்புறத்தில் 2/3 பங்கு 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளுக்கும் பிரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. வாய்க்காரராக பிரிக்கப்படவில்லை. வா.சா.ஆ.6 கிரைய பத்திரம் யார் யாருக்கு எழுதி கொடுத்தது என்றால் 1, 2 பிரதிவாதிகள் சேர்ந்து 3ம்பிரதிவாதிக்கு எழுதி கொடுத்துள்ளனர்.

5. மேற்படி வா.சா.ஆ.6 உள்ள விஸ்தீரனம் மற்றும் நான்கெல்லை விவரம் சரிதான் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ல் கிழக்கு புறத்தில் 1/3 பங்கு எனக்கு பிரிந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதால், அதை தெரிந்து பின்னிட்டு தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் மோசடி செய்ததால் தாக்கல் செய்தேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். வா.சா.ஆ.6 ல் உள்ள சொத்து விவரத்தில் மேற்படி வாய்க்காரர் பாகப்பிரிவினை குறிப்பிட்டு கிழக்கே 1/3 பங்கு எனக்கும், மேற்கே 2/3 பங்கு 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளுக்கும் பிரிந்ததாக கூறி காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் நான் கையொப்பம் செய்யவில்லை.

6. மொத்த சொத்திற்கும் பட்டா எனது, 1 மற்றும் 2 பிதிவாதிகள் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு வீட்டுவரி நான் கட்டியுள்ளேனா என்றால் கட்டியுள்ளேன். மேற்படி வீட்டுவரிக்கான இரசீதை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி வீட்டின் ஒரு பாதி கீழ்புற 1/3 பங்கிலும், மற்றொரு மேற்புறம் 2/3 பங்கிலும் உள்ளது என்பதால் தான் பாகப்பிரிவினை செய்யும் போது கீழ்புற 1/3 பங்கு எனக்கும், மேற்புறம் 2/3 பங்கு 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கும் பிரிவினை செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை ஏதும் ஏற்படவில்லை. வீடு இரண்டு பகுதியாக உள்ளது என்றும், நான் சொல்வது போல் கூட்டாக இல்லை என்றால் சரியல்ல.

7. மேற்படி வீடு எந்த திசையை நோக்கி உள்ளது என்றால் வடபுறம் நோக்கி உள்ளது. பட்டா கூட்டாக உள்ளதை சாதகமாக பயன்படுத்தி சொத்து பாகப்பிரிவினை செய்யப்படவில்லை என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. மேற்படி வீட்டின் மதிப்பு என்ன என்றால் அது பற்றி தெரியாது. நான்

வீட்டுவரி கட்டவில்லை என்றும், நான் வீட்டு வரி கட்டியதாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பொதுவாக எனது தாயார் பெயரில் வீட்டு வரி செலுத்தி வருகிறேன். மேற்படி விவரத்தை எனது வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. நான தினக்கூலி வேலை செய்து வருகிறேன்.

8. எனது தாயாருக்கும் எனக்கும் என்ன பிரச்சனை என்றால் பிரச்சனை எதுவும் இல்லை. எனக்கும், எனது தாயார் மற்றும் சகோதருக்கும் இடையே குடும்ப பிரச்சனை ஏற்பட்டதை மனதில் வைத்து வாய்க்காரர் பாகபிரிவினை மறைத்து சாட்சியம் அளிகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து முழுவதும் கூட்டு சுவாதினத்தில் இருப்பதாக பொய்யாக குறிப்பிட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 05.04.2024 ல் சொத்தை பிரித்து கொடுக்க சொல்லி கேட்டேன். நான் அவ்வாறு கேட்டது வேறு யாருக்கு தெரியும் என்றால் எனது குடும்பத்தில் உள்ளவர்களுக்கு மட்டுமே தெரியும்.

9. வா.சா.ஆ.6 ஆவணத்தை பற்றிய விவரம் எற்படுத்திய அன்றே தெரியும் என்றும், அதை மறைத்து தற்போது தான் தெரியும் என்று பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணத்தை பொறுத்து பரிகாரம் கோராமல் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளது நிலைநிற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து ஏற்கனவே பிரிவினை செய்யப்பட்ட சொத்து என்பதால் பாகப்பிரிவினை கோரி இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளது நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.
குறுக்கு விசாணை முடித்துவைக்கப்பட்டது.

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**